- கார்பன் –11 ஐசோடோப்பு மூளை நுண்ணாய்வு சிகிச்சைக்குப் பயன்படுகிறது.
- எதிர் மின்னேற்றம் உள்ள எலக்ட்ரான்கள் குறிப்பிட்ட வட்டப்பாதைகளில் உட்கருவைச் சுற்றி வருகின்றன. இவை ஆர்பிட்டுகள் என்றழைக்கப்படுகின்றன.
- மூன்றாவது வட்டப்பாதை முழுமையாக நிரம்பும் முன்னரே நான்காவது வட்டப்பாதையில் எலக்ட்ரான்கள் நிரம்பத் தொடஙகுகின்றது. இது ''குவாண்டம் எண்கள்'' என்றழைக்கப்படுகின்றது.
- ஓர் அணுவின் வெளிவட்டப்பாதையில் இடம்பெற்றுள்ள எலக்ட்ரான்கள் வேதிப் பிணைப்புகளில் பஙகு வகிக்கிறது. இந்த எலக்ட்ரான்கள் இணைதிறன் எலக்ட்ரான்கள் எனப்படும்.
- லித்தியம் அணுவில் (அணு எண் = 3) எலக்ட்ரான் பகிர்வு (n =1 ) K ஆர்பிட் = 2 எலக்ட்ரான்கள் (n =2) L ஆர்பிட் = 1 (மீதமுள்ள எலக்ட்ரான்) வெளிவட்டப்பாதை "L" ஆகும். வெளிவட்ட எலக்ட்ரான்கள் எண்ணிக்கை = 1 எனவே, லித்தியம் அணுவின் இணைதிறன் = 1 ஆகும்

**வேதிச்சமன்பாடு**

- ஒரு தனிமத்திலிருந்து மற்றொரு தனிமத்திற்கு எலக்ட்ரான்கள் பரிமாற்றப்படுவதால், மின்னேற்றம் பெற்ற அயனிகள் உருவாகின்றன.
- சோடியம் அயனி ($Na^+$) ஒரு ஓரணு நேர் அயனி அகும்.
- புளுரைடு அயனி (F) ஒரு ஓரணு எதிர் அயனி ஆகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC

- பெரும்பான்மையான ஓரணு எதிர் அயனிகளின் பெயர்கள்–"ஐடு" என்ற பின்னொட்டுடன் முடிகின்றன.
- ஒரு சேர்மத்தின் பெயரிலிருந்து, அச் சேர்மத்தில் அடங்கியுள்ள நேர் மற்றும் எதிர் அயனிகளின் எண்ணிக்கைகளைக் கூற இயலாது.
- பலஅணு அயனித் தொகுதிகள் உள்ள சேர்மங்கள் அயனித்தன்மை கொண்டவை ஆகும்.
- அம்மோனியம் அயனி என்பது ஒரு பலஅணு அயனித்தொகுதி உடைய நேர் அயனி ஆகும். இது $NH_4^+$ எனக் குறிப்பிடப்படுகிறது.
- மெர்குரஸ் அயனி $Hg_2^{2+}$ என்ற மூலக்கூறு இரட்டையாக மட்டுமே காணப்படுகிறது.
- பெரும்பான்மையான பல அணு அயனித் தொகுதிகளின் பெயர் பின்னொட்டுகள் "ஐட்" அல்லது "ஏட்" என முடிவடைகின்றன.
- இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 13 மில்லியன் சேர்மங்களில் 91% சேர்மங்கள் கார்பன் அடங்கிய சேர்மங்கள் ஆகும். (ஒரு மில்லியன் என்பது பத்து இலட்சம்).
- மனிதனால் மேற்கொள்ளப்பட்ட முதல் வேதிவினை "எரிதல் வினை"

**தனிமங்களின் ஆவர்த்தன வகைப்பாடு**

- 1789ஆம் ஆண்டு லாவாய்சியர் முதன் முதலில் தனிமங்களை உலோகங்கள் மற்றும் அலோகங்கள் என இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தினார்.
- 1817ஆம் ஆண்டு ஜோஹான் உல்ஃப்காங்க் டோபரீனர் அறிவியலார் தனிமங்களை மும்மை அடுக்குகளாக வரிசைப்படுத்தினார்.
- 1863ஆம் ஆண்டு, ஜான் நியூலண்ட் அறிவியலார் புதிய கொள்கையின் அடிப்படையில் தனிமங்களை வரிசைப்படுத்தினார். இம்முறை நியூலன்டின் எண்ம விதி என அழைக்கப்பட்டது.
- தனிமங்களை அவற்றின் அணுநிறைகளின் ஏறுவரிசையில் வரிசைப்படுத்தும்போது, எட்டாவது தனிமம் முதல் தனிமத்தின் பண்புகளுடன் ஒத்துள்ளது.
- 1864ஆம் ஆண்டு லோதர் மேயர் அறிவியலார், வெவ்வேறு தனிமங்களின் அணு நிறைகளின் மதிப்புகளை அவற்றின் அணுபருமன்களுடன் தொடர்புபடுத்தி வரைபடம் வரைந்தார்.
- ருஷ்யாவைச் சார்ந்த டிமிட்ரிவ் இவானோவிச் மெண்டலீப் வேதியியலார் 1869ஆம் ஆண்டு ஓரளவு முழுமையாக அனைத்து தனிமங்களையும் முதன்முறையாக வரிசைப்படுத்தினார். அவரது கருத்து அடிப்படையில், தனிம வரிசை அட்டவணையை உருவாக்கினார்.
- தனிமங்களின் இயற்பியல் பண்புகளும், வேதியியல் பண்புகளும் அவற்றின் அணுநிறைகளின் அடிப்படையில் ஆவர்த்தன மாற்றம் அடைகின்றன.
- மெண்டலீப் அட்டவணையில் எட்டுத் தொகுதிகள் செங்குத்தாக அமைந்துள்ளன.
- செங்குத்தான வரிசைகள் தொகுதிகள் எனவும், கிடைமட்டமான வரிசைகள் தொடர்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- மொத்தமாக ஒன்பது செங்குத்தான தொகுதிகள் உள்ளன. அவைI முதல் VIII வரையும் மற்றும் பூஜ்யம் தொகுதி எனவும் எண்ணிடப்பட்டுள்ளன.
- கிடைமட்டமாக மொத்தம் ஏழு தொடர்கள் இடம் பெற்றுள்ளன.
- முதல் மூன்று தொடர்களும் முறையே 2,8,8 தனிமங்கள் வீதம் நிரப்பப்பட்டுள்ளன. இவை குறுந்தொடர்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- கார உலோகங்களாகிய சோடியம், பொட்டாசியம், நாணய உலோகங்களாகிய காப்பர், சில்வர், கோல்டு ஆகியவற்றுடன் சேர்ந்து ஒரே தொகுதியில் இடம் பெற்றுள்ளன.
- காலியம் ஓர் உலோகம். இதன் உருகுநிலை 29.8$^0$C. ஆகவே, மனித உடல் வெப்பநிலையில் உருகும் இயல்புடையது.
- கோல்டு, பிளாட்டினம் போன்ற உலோகங்கள், நீருடனும் ஆக்ஸிஜனுடனும் வினைபுரிவதில்லை. இதன் காரணமாக, இவ்வுலோகங்கள் ஆபரணங்கள் செய்யப் பயன்படுகின்றன.
- ருபீடியம் உலோகம் நீருடன் விரைவில் வினைபுரியும் திறனையும், காற்றுபடும்படி திறந்து வைத்தால் தீப்பற்றி எரியும் பண்பையும் பெற்றுள்ளது.
- அலோகங்களுக்கு எடுத்துக்காட்டு சல்பர், பாஸ்பரஸ், புரோமின், கார்பன்
- உலோக போலிகளுக்கு எடுத்துக்காட்டு சிலிக்கன், ஜெர்மானியம்.
- மெர்குரியைத் தவிர ஏனைய பிற உலோகங்கள் அனைத்தும் திண்மங்கள்.
- உலோகங்களில் அதிக மின்கடத்து திறன் பண்புடையது சில்வர் ஆகும்.
- அலோகங்களில் கிராபைட் மட்டும் மின்கடத்தும் இயல்புடையது.
- அறை வெப்பநிலையில் நீர்மமாகவும், மிகக் குறைந்த உருகுநிலை உடைய உலோகம் மெர்குரி ஆகும்.
- 3300$^0$Cஐ விட அதிக உருகுநிலையைப் பெற்றுள்ள உலோகம் டங்க்ஸ்டன் ஆகும்.
- மிகவும் எடைகுறைந்த உலோகம் லித்தியம். நீரின் நிறையில் சரிபாதி நிறையை இவ்வுலோகம் பெற்றுள்ளது.
- மிகவும் அதிக எடை உள்ள உலோகம் ஆஸ்மியம். இவ்வுலோகம், நீரின் நிறையைப் போல் 22½ மடங்கு அதிக நிறை கொண்டது. மேலும், இரும்பை போல் 3 மடங்கு அதிக நிறை உடையது.
- தனிம வரிசை அட்டவணையில், ஒரு தொடரில் இடமிருந்து வலமாக உலோகங்களின் செயல்திறன் குறைகிறது. மேலும், தனிம வரிசை அட்டவணையில் ஒரு தொகுதியில், மேலிருந்து கீழாக உலோகங்களின் செயல்திறன் அதிகரிக்கிறது.
- இரும்பு, அலுமினியம், நிக்கல் மற்றும் கோபால்ட் ஆகிய உலோகங்கள் அடங்கிய உலோகக்கலவை அல்னிகோஸ் ஆகும். இவை காந்தங்கள் தயாரிக்க பயன்படுகின்றன. சாதாரண காந்தத்தை விட அல்னிகோஸ் 25 மடங்கு அதிக காந்தத் தன்மை உடையது.
- இரசக்கலவை என்பது ஓர் உலோகக்கலவை ஆகும். இதில் இடம் பெற்றுள்ள உலோகங்களில் மெர்குரி ஒரு உலோகம் ஆகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC

| பெயர் | பகுதிப்பொருட்கள் | பயன்கள் |
|---|---|---|
| பித்தளை | காப்பர்<br>ஜிங்க் | ஆணிகள், ஜன்னல் மற்றும் கதவுச் சட்டங்கள் தயாரிக்க. |
| வெண்கலம் | காப்பர்<br>டின் | சிலைகள் மற்றும் இயந்திரத்தின் பாகஙகள் தயாரிக்க. |
| பற்றாசு | டின் லெட் | மின் சாதனங்கள் மற்றும் குடிநீர் குழாய் உற்பத்தித் தொழிலில் உலோகங்களை உருக்காமல் இணைக்க. |
| துருப்பிடிக்காத எஃகு | இரும்பு<br>கார்பன்<br>குரோமியம்<br>நிக்கல்<br>டங்ஸ்டன் | பாலஙகள், கட்டடஙகள், வீட்டு சாதனங்கள் மற்றும் சமையல் பாத்திரஙகள் உருவாக்க. |

| | | |
|---|---|---|
| டியூராலுமின் | அலுமினியம்<br>காப்பர்<br>மாங்கனீசு<br>மெக்னீசியம் | ஆகாய விமான சாதனங்கள், மோட்டார் வாகனங்கள், கப்பல் கட்டும் தொழில் மற்றும் ஆணிகள் தயாரிக்க. |

- 1 முதல் 100 nm அளவுள்ள அணுக்கள், மூலக்கூறுகள் மற்றும் பொருட்கள் சார்ந்த அறிவியலே நேனோ அறிவியல் ஆகும். 1 நேனோ மீட்டர் = $10^{-9}$ மீட்டர்.
- ஒரு நேனோ மீட்டர் என்பது ஒரு மீட்டர் நீளத்தில் ஒரு பில்லியனில் ( $10^{-12}$ ) ஒரு அலகு உள்ள நீளத்திற்கு சமம் ஆகும்.
- சாதாரண கணினிகளை விட விரைவாக செயல்படும், திறன்வாய்ந்த உருவளவில் சிறிய கணினிகளை வடிவமைக்கலாம்.
- மிகமிகச்சிறிய பம்புகளை (குழாய் பொறிகள்) தயாரிப்பதன் மூலம் மருத்துவத் துறையில் பயன்படுத்தலாம்.

**வேதிப்பிணைப்புகள்**

- 1916இல், ஜி.என். லூயிஸ் இணை திறன் எலக்ட்ரான் கொள்கையினை வெளியிட்டர். இதற்கு எண்ம விதி என்று பெயர்.
- வெப்பம் தாங்கவல்லப் பொருட்கள் அயனிச்சேர்மங்களே ஆகும்.
- அயனிகள் உருகிய நிலையிலும் நீரில் கரைக்கப்படும் போதும் மட்டுமே மின்சாரத்தைக் கடத்துகின்றன.

**கரைசல்கள்**

- உண்மைக் கரைசல்களுக்கு எடுத்துக்காட்டு **சர்க்கரைக் கரைசல்.**
- கூழ்மக் கரைசல்களுக்கு எடுத்துக்காட்டு **பால்.**
- தொஙகல்களுக்கு எடுத்துக்காட்டு **சுண்ணாம்பு நீரின் கலவை.**
- கூழ்மத் துகள்களின் மீது ஒளியானது பட்டு சிதறும் நிலையே **டின்டால் விளைவு**எனப்படும்.
- தொடர்ந்து ஒழுங்கில்லா நிலையில் இயஙகும் கூழ்மத்துகளின் இயக்கமே **பிரௌனியின் இயக்கம்.**

**உண்மைக் கரைசல், கூழ்மக் கரைசல் மற்றும் தொஙகல்களின் பண்புகளை ஒப்பிடுதல்**

| பண்புகள் | உண்மைக் கரைசல் | கூழ்மக் கரைசல் | தொஙகல் |
|---|---|---|---|
| துகள்களின் அளவு ($A^0$)<br>1 $A^0$=$10^{-10}$ m | 1 $A^0$முதல் 10 $A^0$வரை | 10 $A^0$முதல் 1000 $A^0$வரை | 1000 $A^0$மேல் |
| தோற்றம் | ஒளிபுகும் தன்மை கொண்டது | பகுதியளவு ஒளிபுகும் தன்மை கொண்டது | ஒளிபுகா தன்மை கொண்டது |
| துகளைப் பார்க்கக்கூடிய திறன் | நுண்ணோக்கியின் மூலமும் தெரிவதில்லை | நுண்ணோக்கியால் மட்டுமே பார்க்க இயலும் | கண்ணால் பார்க்க இயலும் |
| கரைசலின் தன்மை | ஒருபடித்தானவை | பலபடித்தானவை | பலபடித்தானவை |
| துகளின் பரவும் தன்மை | எளிதில் பரவும் | மெதுவாகப் பரவும் | பரவாது அல்லது பரவும் தன்மை அற்றது. |
| சிதறல் விளைவு | ஒளியைச் சிதறச் செய்யாது | ஒளியைச் சிதறச் செய்யும் | ஒளியைச் சிதறச் செய்யாது |

- நீர்த்த கரைசல்: எந்த ஒரு கரைசலில், கரைபொருளைக் கரைக்கும் கரைப்பானாக நீர் செயல்படுகிறதோ, அக்கரைசல் நீர்த்த கரைசல் எனப்படும். (எ.கா) சர்க்கரைக் கரைசல்.
- நீரற்ற கரைசல்: எந்த ஒரு கரைசலில், நீரைத் தவிர, பிற திரவமானது கரைப்பானாகச் செயல்படுகிறதோ, அக்கரைசல், நீரற்ற கரைசல் எனப்படும். பென்சீன், ஈதர், CS2முதலானவை நீரற்ற கரைப்பானுக்குச் சிறந்த உதாரணஙகள்.
- தெவிட்டாத கரைசல் : கரைப்பானோடு ஒப்பிடும் போது குறைந்த அளவு கரைபொருளைக் கொண்ட கரைசல் தெவிட்டாத கரைசல் எனப்படும். இக்கரைசலில், கரைபொருளைத் தெவிட்டும் நிலை அடையும் வரை சேர்க்க முடியும். எ.கா. 5 கிராம், அல்லது 10 கிராம் அல்லது 20 கிராம் உப்பு, 100 கிராம் தண்ணீரில் கலந்த கரைசல்.
- தெவிட்டிய கரைசல் : எந்த ஒரு கரைசலில் ஒரு குறிப்பிட்ட அளவு கரைப்பானில், மேலும் கரைபொருள் கரைய முடியாதோ, அக்கரைசலே தெவிட்டிய கரைசல் எனப்படும். (எ.கா.) 1) கார்பன்–டை–ஆக்சைடு நீரில் கரைந்து உருவான தெவிட்டிய கரைசல். 2) 36 கிராம் சோடியம் குளோரைடு உப்பு, 100 கிராம் நீரில் கரைக்கப்பட்ட தெவிட்டிய கரைசல். 3) $CO_2$வை நீரில் கரைத்து கிடைத்த தெவிட்டிய கரைசல்.
- பூமியில் கலந்துள்ள நைட்ரஜன், தெவிட்டிய கரைசலுக்கு இயற்கை காட்டும் உதாரணம்.
- அதி தெவிட்டிய கரைசல் : குறிப்பிட்ட வெப்பநிலையில் தெவிட்டிய கரைசலைவிட அதிகமான கரைபொருளைக் கொண்ட கரைசல் அதி தெவிட்டிய கரைசல் எனப்படும்.
- 100 கிராம் தண்ணீர் 36 கிராம் சோடியம் குளோரைடை 25 $^0$C வெப்பநிலையில் கரைத்து தெவிட்டிய கரைசலை உருவாக்கும்.
- கரைபொருள், கரைப்பானின் இயல்பு நிலையைப் பொறுத்து கரைசல்களை 9 வகைகளாகப் பிரிக்கலாம்.

| கரைபொருள் | கரைப்பான் | எ.கா. |
|---|---|---|
| திண்மம் | திண்மம் | உலோகக் கலவைகள் |
| திண்மம் | நீர்மம் | சர்க்கரைக் கரைசல் |
| திண்மம் | வாயு | புகை |
| நீர்மம் | திண்மம் | பாலாடைக் கட்டி |
| நீர்மம் | நீர்மம் | பால் |
| நீர்மம் | வாயு | மேகம் |
| வாயு | திண்மம் | தக்கை |
| வாயு | நீர்மம் | சோடா நீர் |
| வாயு | வாயு | ஹீலியம் – ஆக்ஸிஜன் வாயுக்கலவை(ஆழ்கடல் மூழ்குதலில் பயன்படுகிறது) |

NATRAJ INSTITUTE OF TNPSC

- நீரில் 200 C வெப்பநிலையில் காப்பர் சல்பேட்டின் கரைதிறன் 20.7 கிராம்.
- சில அயனி உப்புக்களின் கரைதிறன்

| அயனி உப்பு | கரைதிறன் (கி/100கி நீர்) |
|---|---|
| NaCl | 36 கிராம் |
| NaBr | 95 கிராம் |
| NaI | 184 கிராம் |
| $NaNO_3$ | 92 கிராம் |

- கரைதிறனைப் பாதிக்கும் காரணிகள் (1) வெப்பநிலை (2) கரைபொருள் அல்லது கரைப்பானின் தன்மை (3) அழுத்தம்
- வெப்பநிலை அதிகமானால் வெப்பம் கொள் விளையில் கரைதன்மை அதிகமாகும்.
- வெப்ப உமிழ்வினையில், கரைதன்மை குறைகிறது.
- அயனி உப்பானது, அயனிக்கரைப்பானில் எளிதில் கரையும்.
- வாயுவிரவிய நீர்மக்கரைசலில் அழுத்த அதிகரிப்பால் கரைதன்மை அதிகரிக்கும். எ.கா. CO2 வாயு விரவிய குளிர்பானம்.

**மதிப்பீடு**

**பிரிவு– அ**

1. நீரைக் கரைப்பனாகக் கொண்ட கரைசல் நீர்த்த கரைசல் ஆகும். கார்பன்டைசல்பைடைக் கரைப்பானாகக் கொண்ட கரைசல் __________ ஆகும். ( **நீர்த்த கரைசல்,** நீரிலி கரைசல் )
2. உப்பின் கரைதிறன் 100கிராம் தண்ணீரில் 36கிராம் ஆகும். 20கிராம் உப்பு நீரில் கரைக்கப்பட்டால் தெவிட்டிய நிலையை அடைய இன்னும் எத்தனை கிராம் உப்பு தேவைப்படும். **(16 கிராம்)**
3. இரண்டு திரவங்கள் ஒன்றிலொன்று கரையுமானால் அத்திரவங்கள் __________ எனப்படும். ( **இரண்டறக் கலப்பவை,** இரண்டறக் கலவாதவை )
4. சூரிய ஒளி நும் வகுப்பின் ஜன்னல் வழியே வரும்போது, அதன் பாதை தெரிவதன் காரணம் ஒளியின் __________( பிரதிபலிப்பால், **சிதறலால்** )
5. ஒரு கரைசலின் துகள்கள் மீநுண்ணோக்கி வழியே தெரிவதனால் அக்கரைசல் __________ எனப்படும்.( உண்மைக் கரைசல், **கூழ்மக் கரைசல்** )
6. இருமடிக் கரைசலில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை. ( ஒன்று / **இரண்டு** )
7. ஆழ்கடல் முத்துக் குளிப்பவர்கள் சுவாசிக்கப்பயன்படுத்தும் வாயுக்கலவை __________ ( **ஹீலியம்– ஆக்ஸிஜன்,** ஆக்ஸிஜன் – நைட்ரஜன்).
8. புவியின் மணற்பரப்பு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் நைட்ரஜனை தன்னுள் கொள்ளமுடியாநிலை __________ எனப்படும். (**தெவிட்டிய நிலை**, தெவிட்டாத நிலை )

**அணுக்களும் மூலக்கூறுகளும்**

- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்ற ஜெர்மன் நாட்டு அறிவியலாரின் புகழ்பெற்ற $E = mC^2$, என்ற சமன்பாட்டின் மூலம் விளக்க முடியும். இதில் E = வெளியான ஆற்றல் m= நிறை, C= ஒளியின் வேகம்.
- அணு என்பது வேதிவினையில் ஈடுபடும் மிகச்சிறிய துகளாகும்.
- ஒத்த அணு எண்ணையும் வேறுபட்ட நிறை எண்ணையும் கொண்ட ஒரு தனிமத்தின் வெவ்வேறு அணுக்கள், ஐசோடோப்புகள் எனப்படும். எ.கா. $_{17}Cl^{35}$, $_{17}Cl^{37}$
- ஒத்த நிறை எண்ணையும் வேறுபட்ட அணு எண்ணையும் கொண்ட வெவ்வேறுதனிமங்களின் அணுக்கள் ஐசோபார்கள் எனப்படும். எ.கா. $_{18}Ar^{40}$, $_{20}Ca^{40}$
- ஒத்த நியுட்ரான் எண்ணிக்கையும் வேறுபட்ட அணு எண்ணையும், வேறுபட்ட நிறை எண்ணையும் கொண்ட வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் ஐசோடோன்கள் எனப்படும். எ.கா. $_6C^{13}$, $_7N^{14}$
- ஒரு தனிமத்தில் உள்ள ஒரு மூலக் கூறில் எத்தனை அணுக்கள் உள்ளனவோ அதுவே, அத்தனிமத்தின் அணுக்கட்டு எண் ஆகும்.

| அணுக்கட்டு எண் | ஒரு மூலக்கூறில் உள்ள அணுக்களின் எண்ணிக்கை | எ.கா |
|---|---|---|
| ஓரணு மூலக்கூறு | 1 | ஹீலியம், நியான், உலோகங்கள் |
| ஈரணு மூலக்கூறு | 2 | ஹைட்ரஜன் ($H_2$), குளோரின் ($Cl_2$), ஆக்ஸிஜன் ($O_2$) |
| மூவணு மூலக்கூறு | 3 | ஓசோன் ( $O_3$) |
| பன்ம அணு மூலக்கூறு | >3 | பாஸ்பரஸ் ( $P_4$), சல்பர் ( $S_8$) |

NATRAJ INSTITUTE OF TNPSC

- அணுக்கட்டு எண் = மூலக்கூறு நிறை /அணு நிறை
- 2 x ஆவி அடர்த்தி = ஒப்பு மூலக்கூறு நிறை
- STPயில் வாயுவின் மோலார் பருமனின் மதிப்பு = 22.4 லிட் (அல்லது) 22400 க.செமீ.
- ஒரு தனிமத்தின் ஒப்பு அணுநிறை என்பது அத்தனிமத்தின் ஓர் அணுவின் நிறைக்கும் கார்பன் 12 அணுவின் 1/12 பாகத்தின் நிறைக்கும் உள்ள விகிதமாகும்.
- அவோகெட்ரோ எண்ணின் மதிப்பு 6.023 X $10^{23}$.

வேதி வினைகள்

- வெள்ளியும், காற்றில் உள்ள ஹைட்ரஜன் சல்பைடும் வினைபுரிந்து வெள்ளி சல்பைடு ($Ag_2S$) உருவாதலால் வெள்ளிக் கொலுசின் நிறம் மங்குகிறது.
- சுட்டச் சுண்ணாம்பு நீருடன் வினைபுரிந்து நீர்த்த சுண்ணாம்பை (கால்சியம் ஹைட்ராக்சைடை) உருவாக்குகிறது. இது ஒரு வெப்ப உமிழ் வினை.
- சலவைக் கல்லின் வேதி வாய்பாடு $CaCO_3$
- கூடுகை வினையின் எடுத்துக்காட்டுகள்
  2Mg + O2 → 2MgO (மெக்னீசியம் + ஆக்ஸிஜன் → மெக்னீசியம் ஆக்சைடு)
  C + O 2 → CO2 (நிலக்கரி எரிதல்)
  2H2 + O2 → 2H2O (ஹைட்ரஜன் எரிதல்)
- சிதைவுறுதல் வினையின் எடுத்துக்காட்டுகள்
  CuCO3 → CuO + CO2↑ (தாமிர (II) ஆக்சைடாக சிதைவுறுதல்)
  2Pb(NO3)2 → 2PbO + 4NO2↑ + O2↑ (காரீய ஆக்சைடு, நைட்ரஜன் டைஆக்சைடு மற்றும் ஆக்ஸிஜன் உருவாதல்)
  CaCO3 → CaO + CO2↑ (சுண்ணாம்புக் கல் சிதைவுறுதல்)
  (NH4)2Cr2O7 → Cr2O3↑ + N2↑ + 4H2O↑ (அம்மோனியம் டைகுரோமேட் சிதைவுறுதல்)
- மிக அதிக வெப்பநிலையில் அம்மோனியம் டை குரோமேட் உடனடியாகச் சிதைவுற்று, நீராவியுடன் பச்சை நிற வாயு உருவாகிறது. ஓர் எரிமலை வெடிப்பதைப் போல் தோற்றமளிப்பதால் இது வேதி எரிமலை எனப்படுகிறது.
- இடப் பெயர்ச்சி வினையின் எடுத்துக்காட்டுகள்
  Fe + CuSO4 → FeSO4 + Cu
  Pb + CuCl2 → PbCl2 + Cu

- இரட்டை சிதைவு வினையின் எடுத்துக்காட்டுகள் (இரட்டை இடப்பெயர்ச்சி வினை)
  $Na_2SO_4 + BaCl_2 \rightarrow BaSO_4\downarrow + 2NaCl$
  $CuSO_4 + H_2S \rightarrow CuS\downarrow + H_2SO_4$
- ஒரு வேதிவினையில் ஆக்ஸிஜன் சேர்க்கப்படுதலோ அல்லது ஹைட்ரஜன் நீக்கப்படுதலோ அல்லது எலக்ட்ரான்கள் நீக்கப்படுதலோ நிகழும்போது அந்த வினை ஆக்ஸிஜனேற்றம் எனப்படுகிறது.
  $2Mg + O_2 \rightarrow 2MgO$ (ஆக்ஸிஜன் சேர்க்கப்படுகிறது )
  $H_2S + Br_2 \rightarrow 2HBr + S$ (ஹைட்ரஜன் நீக்கப்படுகிறது )
  $Fe^{2+} \rightarrow Fe^{3+} + e^-$ (எலக்ட்ரான் நீக்கப்படுகிறது )
- ஒரு வேதி வினையில் ஹைட்ரஜன் சேர்க்கப்படுதலோ அல்லது ஆக்ஸிஜன் நீக்கப்படுதலோ அல்லது எலக்ட்ரான் ஏற்கப்படுதலோ நிகழும்போது அந்த வினை ஒடுக்கம் எனப்படுகிறது.
  $2Na + H_2 \rightarrow 2NaH$(ஹைட்ரஜன் சேர்க்கப்படுகிறது )
  $CuO + H_2 \rightarrow Cu + H_2O$ ( ஆக்ஸிஜன் நீக்கப்படுகிறது )
  $Fe^{3+} + e^- \rightarrow Fe^{2+}$( எலக்ட்ரான் சேர்க்கப்படுகிறது )
- ஆக்ஸிஜனேற்றம் என்பது ஆக்ஸிஜனை ஏற்றல், ஹைட்ரஜனை நீக்குதல், எலக்ட்ரானை(களை) இழத்தல்
- ஒடுக்கம் என்பது ஆக்ஸிஜனை நீக்குதல், ஹைட்ரஜனை ஏற்றல், எலக்ட்ரானை(களை) ஏற்றல்.
- ஆக்ஸிஜனேற்றமும், ஒடுக்கமும் சேர்ந்தே நிகழ்வதால் ஏற்படும் வினை ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க வினை என அழைக்கப்படுகிறது.
- ஆக்ஸிஜனேற்றம் நாம் சாப்பிடும் உணவுப் பொருள்களிலும் ஓர் எதிர்மறை விளைவை உண்டாக்குகிறது. கொழுப்பு மற்றும் எண்ணெய் உள்ள உணவுப் பொருள்களை அதிக நேரம் வைத்திருக்கும்போது அவை கெட்டு விடுகின்றன. இவை கெட்ட சுவையையும் துர்நாற்றத்தையும் தருகின்றன. இது குறிப்பாகக் கோடை காலத்தில் தயிர், மற்றும் வெண்ணெய் ஆகியவற்றில் காணப்படுகின்றன. எண்ணெய் மற்றும் கொழுப்புகள் ஆக்ஸிஜனேற்றமடைந்து துர்நாற்றமுள்ள பொருள்களாக மாறுகின்றன.
- வெப்பம் உமிழ் வினைக்கு எடுத்துக்காட்டு : $N_2 + 3H_2 \rightarrow 2NH_3$ + வெப்பம்
- வெப்பம்கொள் வினைக்கு எடுத்துக்காட்டு : $2NH_3$ + வெப்பம் $\rightarrow N_2 + 3H_2$
- ஆசிட் என்ற ஆஙகில வார்த்தை அசிடஸ் என்ற இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்டது.அசிடஸ் என்ற இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்ட ஆசிட் என்ற ஆஙகில வார்த்தைக்குப் புளிப்புச்சுவை என்று பொருள்.
- புளிப்புச்சுவையைக் கொண்ட எலுமிச்சை சாறு, காடி மற்றும் திராட்சை சாறு முதலியன அமிலத்தன்மை உடையவை.
- அமிலஙகள் நீல லிட்மஸ் தாளை சிவப்பாக மாற்றுகின்றன.
- அமிலத்துடன் பினாப்தலீன் சேர்க்கும்போது நிறமற்றதாகவும், மெத்தில் ஆரஞ்சு சேர்க்கும்போது இளஞ்சிவப்பு நிறமாகவும் உள்ளன.

| மூலஙகள் | இருக்கக்கூடிய அமிலஙகள் |
|---|---|
| ஆப்பிள் | மாலிக் அமிலம் |
| எலுமிச்சை | சிட்ரிக் அமிலம் |
| திராட்சை | டார்டாரிக் அமிலம் |
| தக்காளி | ஆக்ஸாலிக் அமிலம் |
| காடி | அசிட்டிக் அமிலம் |
| தயிர் | லாக்டிக் அமிலம் |

- கரிம அமிலஙகளுக்கு எடுத்துக்காட்டுகள் : HCOOH, $CH_3COOH$ (வலிமை குறைந்த அமிலஙகள்)
- கனிம அமிலஙகளுக்கு எடுத்துக்காட்டுகள் : HCl, $HNO_3$, $H_2SO_4$ (வலிமிகு அமிலஙகள்)
- ஒரு காரத்துவ அமிலத்திற்கு எடுத்துக்காட்டுகள் : HCl, $HNO_3$
- இரு காரத்துவ அமிலத்திற்கு எடுத்துக்காட்டுகள் : $H_2SO_4$, $H_2CO_3$
- முக்காரத்துவ அமிலத்திற்கு எடுத்துக்காட்டு : $H_3PO_4$
- காரத்துவம் என்பது ஒரு மூலக்கூறு அமிலத்தில் உள்ள இடப்பெயர்ச்சி செய்யக்கூடிய ஹைட்ரஜன் அணுக்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாம். எ.கா. அசிட்டிக் அமிலத்தில் நான்கு ஹைட்ரஜன் அணுக்கள் இருந்தாலும் ஒரே ஒரு ஹைட்ரஜனை மட்டுமே இடப்பெயர்ச்சி செய்ய முடியும். எனவே, இது ஒரு காரத்துவமுடையது.
- உலோக கார்பனேட்டுகள் அல்லது உலோகபைகார்பனேட்டுகள் காரத்தன்மை பெற்றிருப்பதால் அமிலத்துடன் வினைபுரிந்து கார்பன் டைஆக்சைடை வெளியேற்றி உப்பையும் நீரையும் தருகின்றன.
- கந்தக அமிலம் (வேதிப் பொருள்களின் அரசன்) கார் மின்கலஙகள் மற்றும் பல சேர்மஙகளைத் தயாரிப்பதில் பயன்படுகிறது.
- நைட்ரிக் அமிலம் விவசாயத்தில் உரமாக பயன்படும் அம்மோனியம் நைட்ரேட் என்ற சேர்மத்தைத் தயாரிக்கப் பயன்படுகிறது.
- கழிவறைகளைத் தூய்மைப் படுத்தும் பொருளாக ஹைட்ரோகுளோரிக் அமிலம் பயன்படுகிறது.
- டார்டாரிக் அமிலமானது சமையல்சோடாவில் ஒரு பகுதிப் பொருளாகும்.
- பென்சாயிக் அமிலத்தின் உப்பு(சோடியம் பென்சோயேட்) உணவுப்பொருள்களை பாதுகாக்கப் பயன்படுகிறது.
- காற்று அடைக்கப்பட்ட பானஙகளில் கார்பானிக் அமிலம் பயன்படுகிறது.
- காரஙகள் சிவப்பு லிட்மஸ் தாளை நீலமாக மாற்றுகின்றன.
- காரஙகள் பினாப்தலினுடன் இளஞ்சிவப்பு நிறத்தையும், மெத்தில் ஆரஞ்சுடன் மஞ்சள் நிறத்தையும் தருகின்றன.
- சோடியம் ஹைட்ராக்சைடு சோப்பு தயாரிக்கப் பயன்படுகிறது.
- கால்சியம் ஹைட்ராக்சைடு கட்டிடஙகளுக்கு வெள்ளையடிப்பதற்குப் பயன்படுகிறது.
- மெக்னீசியம் ஹைட்ராக்சைடானது வயிற்று உபாதைகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.
- அம்மோனியம் ஹைட்ராக்சைடு துணிகளில் உள்ள எண்ணெய் கறை மற்றும் பிசுக்கினை நீக்கப் பயன்படுகிறது.
- எல்லா உலோகஙகளும் சோடியம் ஹைட்ராக்சைடுடன் வினைபுரிவது இல்லை. எ.கா. Cu, Ag, Cr.

| கரைசல் | pH- ன் தோராய மதிப்பு |
|---|---|
| எலுமிச்சைச் சாறு | 2.2 – 2.4 |
| தக்காளிச் சாறு | 4.1 |
| காபி | 4.4 – 5.5 |
| மனிதனின் உமிழ்நீர் | 6.5 – 7.5 |
| வீட்டில் பயன்படுத்தும் அம்மோனியா | 12.0 |

- pH–ன் மதிப்பு **6.9** ஆகும்போது மனித உடம்பு குளிர், இருமல் மற்றும் ப்ளூ இவற்றின் தாக்கத்திற்கு ஆளாகிறது. மனித உடம்பின் pH **5.5**ஆக இருக்கும்போது புற்றுநோய் உருவாக்கும் செல்கள் தோன்றி உடம்பில் உயிர்வாழ ஏதுவாகிறது.
- ஒரு ஆரோக்கியமான மனிதனின் உடம்பிலுள்ள தோலின் pH **4.5**லிருந்தது **6** ஆக இருக்கும்.
- நம் வயிற்றில் சுரக்கும் திரவத்தின் pH மதிப்பு கிட்டத்தட்ட **2** ஆகும்.
- மனித இரத்தத்தின் pH **7.35**லிருந்து **7.45**ஆக இருக்கும். இரத்தத்தின் pH மதிப்பு **7.4** ஆகும்.
- உமிழ்நீரின் pH சாதராணமாக **6.5**லிருந்து **7.5**க்குள் இருக்கும்.
- நம் பற்களிலுள்ள எனாமல் என்னும் வெள்ளைப்படலமானது நம் உடம்பிலேயே மிகவும் கடினமான பகுதியாகும். இது கால்சியம் பாஸ்பேட் என்ற சேர்மத்தினாலானது. இது நீரில் கரைவதில்லை.

NATRAJ INSTITUTE OF TNPSC

நம் வாயின் pH 5.5–க்குக் கீழே குறையும்போது இந்த எனாமல் அரிக்கப்படுகிறது. பற்களைச் சுத்தப்படுத்தப் பயன்படும் பற்பசைகள் பொதுவாகக் காரத்தன்மை பெற்றிருப்பதால் அவை அதிகப்படியான அமிலத்தை நடுநிலையாக்கிப் பற்சிதைவைத் தடுக்கின்றன.

- சிட்ரஸ் பழஙகள் காரத்தன்மையுடைய மண்ணிலும், அரிசி அமிலத்தன்மை கொண்ட மண்ணிலும், கரும்பு நடுநிலைத் தன்மை கொண்ட மண்ணிலும் அதிகமாக விளைகின்றன.
- மழைநீரின் pH கிட்டத்தட்ட 7 ஆகும்.
- இரட்டை உப்புகளுக்கு எடுத்துக்காட்டு பொட்டாஷ் படிகாரம்.
- சாதாரண உப்பு (NaCl) நம் அன்றாட உணவிலும், உணவைப் பாதுகாப்பதிலும் பயன்படுகிறது.
- சலவை சோடா (Na2CO3) கடின நீரை மென்நீராக மாற்றப் பயன்படுகிறது, வீடுகளில் சுத்தப்படுத்தும் பொருளாகப் பயன்படுகிறது.
- சமையல் சோடா (NaHCO3) ரொட்டிசோடா தயாரிக்கப் பயன்படுகிறது. ரொட்டிசோடா என்பது சமையல் சோடாவும் டார்டாரிக் அமிலமும் சேர்ந்த கலவையாகும். இது கேக் மற்றும் ரொட்டிகளை மென்மையாக மாற்றுகிறது.
- சலவைத் தூள் (CaOCl2) குடிநீரிலுள்ள பாக்டீரியாக்களை அழிக்கப் பயன்படுகிறது, பருத்தி மற்றும் லினன் துணிகளை வெளுக்கப் பயன்படுகிறது.
- பாரிஸ் சாந்து (CaSO4.½H2O) முறிந்த எலும்புகளை ஒட்டவைக்கவும் மற்றும் சிலைகளுக்கான வார்ப்புகளைச் செய்யவும் பயன்படுகிறது.
-

**தனிமங்களின் ஆவர்த்தன வகைப்பாடு**

- இதுவரை 118 தனிமங்கள் அறியப் பட்டுள்ளன.
- ஹென்றிஜின் ஜெப்ரிஸ் மோஸ்லே என்ற ஆஙகில இயற்பியல் வல்லுநர் (1887–1915) X-கதிர்களைப் பயன்படுத்தி தனிமஙகளின் அணு எண்களைக் கண்டறிந்தார்.
- 1912 ஆம் ஆண்டில் மோஸ்லே என்ற ஆஙகில இயற்பியல் அறிஞர் ஓர் உலோகத்தை அதிவேக எலக்ட்ரான்களைக் கொண்டு தாக்கும் போது வெளியேறும் X-கதிர்களின் அதிர்வெண்ணை அளந்தறிந்தார்
- மோஸ்லே தனிமங்களை அவற்றின் அணு எண்களின்(z) அடிப்படையிலேயே வகைப்படுத்த வேண்டுமெனக் கூறினார்.
- ஓர் அணுவின் அணு எண் என்பது உட்கருவில் உள்ள புரோட்டான்கள் அல்லது வெளிவட்டப்பாதையில் சுற்றி வரும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கையாகும்.
- நவீன ஆவர்த்தன அட்டவணை நான்கு தொகுதிகளாக முறையே s,p,d மற்றும் f எனப் பிரிக்கப்பட்டுள்ளன.
- முதல் தொடர் (அணு எண் 1 மற்றும் 2) இது மிகவும் குறுகிய தொடர். இதில் இரண்டு தனிமஙகள் மட்டும் உள்ளன (ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் ).
- இரண்டாவது தொடர்: (அணு எண் 3–10) இது குறுகிய தொடர். இதில் எட்டு தனிமஙகள் உள்ளன. (லித்தியத்திலிருந்து நியான் வரை)
- மூன்றாவது தொடர் (அணு எண் 11–18) இதுவும் ஒரு குறுகிய தொடர். இதிலும் எட்டு தனிமஙகள் உள்ளன. (சோடியத்திலிருந்து ஆர்கான் வரை)
- நான்காவது தொடர் (அணு எண் 19–36) இது ஒரு நீண்ட தொடர். இதில் பதினெட்டு தனிமஙகள் உள்ளன(பொட்டாசியத்தில் இருந்து கிரிப்டான் வரை).
- ஐந்தாவது தொடர் (அணு எண் 37–54) இதுவும் ஒரு நீண்ட தொடர் இதிலும் பதினெட்டு தனிமஙகள் உள்ளன (ருபீடியத்திலிருந்து செனான் வரை)
- ஆறாவது தொடர் (அணு எண் 55–86) இது மிகவும் நீண்ட தொடர். இதில் முப்பத்திரண்டு தனிமஙகள் உள்ளன. (சீசியத்திலிருந்து ரேடான் வரை)
- ஏழாவது தொடர் ( அணு எண் 87–118) ஆறாவது வரிசையைப்போலவே முப்பத்திரண்டு தனிமஙகளைக் கொண்டிருக்கமுடியும். ஆனால் இதுவரை இருபத்தாறு தனிமஙகள் மட்டுமே IUPAC-ஆல் அஙகீகரிக்கப்பட்டுள்ளன.
- தனிம வரிசை அட்டவணையில் 18 தொகுதிகள் உள்ளன.
- முதல் தொகுதி தனிமஙகள் கார உலோகஙகளாகும்.
- இரண்டாம் தொகுதி தனிமஙகள் காரமண் உலோகஙகள் எனப்படுகின்றன.
- தொகுதிகள் 3–12 வரையுள்ள தனிமஙகள் இடைநிலைத் தனிமஙகள் எனப்படுகின்றன.
- தொகுதிகள் 1, 2 மற்றும் 13–18 வரையுள்ள தனிமஙகள் சாதாரணத் தனிமஙகள் அல்லது முக்கியத் தொகுதித் தனிமஙகள் அல்லது பிரதிநிதித்துவ தனிமஙகள் என அழைக்கப்படுகின்றன.
- தொகுதி 16ல் உள்ள தனிமஙகள் (பொலோனியம் தவிர) சால்கோஜென்ஸ் குடும்பம் எனப்படுகின்றன.
- தொகுதி–17ல் உள்ள தனிமஙகள் ஹேலோஜன் குடும்பம் எனப்படுகின்றன.
- 18ம் தொகுதித் தனிமஙகள் உயரிய வாயுக்கள் அல்லது மந்தவாயுக்கள் எனப்படுகின்றன.
- தொகுதி 3ன் ஒரு பகுதியாக விளஙகும் லாந்தனைடுகள் மற்றும் ஆக்டினைடுகள் உள்இடைநிலைத் தனிமஙகள் என அழைக்கப்படுகின்றன.
- IUPAC–யால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள இறுதித் தனிமம் அணு எண் 112 கொண்ட கோப்பெரன்சியம் (Cn112). இருப்பினும் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ள தனிமஙகள் 118.
- அணிகலன்கள் உருவாக்க 22 கேரட் தஙகம் பயன் படுத்தப்படும். இதில் 22 பாகம் தஙகமும், 2 பாகம் தாமிரமும் உள்ளது. 22/24 x 100 = 91.6%. அதாவது 91.67% தூய்மையானது.
- தஙகத்தின் தூய்மையை கேரட் என்ற அலகால் குறிக்கிறோம்.
- 1 கிராம் தஙகத்தை 2 கிலோமீட்டர் தூரத்திற்கு மெல்லிய கம்பியாக நீட்டமுடியும்
- களிமண் (Al2O3.2SiO2.2H2O) மற்றும் பாக்ஸைட் (Al2O3,2H2O) ஆகியவை அலுமினியத்தின் கனிமஙகளாகும்.
- அலுமினியத்தின் தாது பாக்ஸைட் ஆகும்.
- Fe இரத்தத்தின் சிவப்பு நிறமி (ஹீமோகுளோபின்) இரும்பைக் கொண்டுள்ளது.
- Ca எலும்பு, பற்களில் மிக முக்கியப் பஙகுவகிக்கிறது.
- Co வைட்டமின் B–12ல் உள்ள உலோகம் ஆகும்.
- Mg தாவரத்தின் பச்சையத்தில் உள்ள உலோகம் ஆகும்

| **ஆக்சைடு தாது** | **கார்பனேட் தாது** | **ஹேலைடு தாது** | **சல்பைடு தாது** |
|---|---|---|---|
| பாக்ஸைட் ($Al_2O_3.2H_2O$) | காலமைன் ($ZnCO_3$) | கிரையோலைட் ($Na_3AlF_6$) | சின்னபார் (HgS) |
| குப்ரைட்($Cu_2O$) | மார்பிள் ($CaCO_3$) | ஃபுளூர்ஸ்பார் ($CaF_2$) | கலீனா (PbS) |
| ஹேமடைட்($Fe_2O_3$) | மெக்னசைட் ($MgCO_3$) | ஹார்ன் சில்வர் (AgCl) | இரும்பு பைரைட் ($FeS_2$) |
| ஸிஙகைட்(ZnO) | சிடரைட்($FeCO_3$) | பாறை உப்பு (NaCl) | ஸிஙக் ப்ளன்டு (ZnS) |

NATRAJ INSTITUTE OF TNPSC

| அலுமினியத்தின் தாதுவின் பெயர் | சமன்பாடு |
|---|---|
| பாக்ஸைட் | $Al_2O_3.2H_2O$ |
| கிரையோலைட் | $Na_3AlF_6$ |
| கொரண்டம் | $Al_2O_3$. |

- நீர்த்த அடர் நைட்ரிக் அமிலம், அலுமினியத்துடன் வினைபுரிவதில்லை மாறாக அலுமினியத்தின் மேல் ஆக்சைடு படலம் உருவாகி அதன் வினைபடும் ஆற்றலைத் தடுக்கிறது.

| காப்பரின் தாதுக்கள் | சமன்பாடு |
|---|---|
| 1. காப்பர் பைரைட் | $CuFeS_2$ |
| 2. குப்ரைட் அல்லது ரூபி காப்பர் | $Cu_2O$ |
| 3. காப்பர் கிளான்ஸ் | $Cu_2S$ |

- மின்னாற்பகுப்பியில் தூய்மை : 1. கேத்தோடுதூய மெல்லிய காப்பர் தகடு 2. ஆனோடுமாசு கலந்த காப்பர் 3. மின்பகுளிகந்த அமிலம் கலந்த காப்பர் சல்பேட் கரைசல்
- தாமிரத்தின் உருகு நிலை 1356°C

| இரும்பின் தாதுக்கள் | சமன்பாடு |
|---|---|
| 1. ஹேமடைட் | $Fe_2O_3$ |
| 2. மேக்னடைட் | $Fe_3O_4$ |
| 3. இரும்பு பைரைட் | $FeS_2$ |

- ஹேமடைட் ஒரு ஆக்சைடு தாது.
- கார்பனேட் தாதுவை அதன் ஆக்சைடாக மாற்ற உகந்த முறை காற்றில்லா சூழலில் வறுத்தல்.
- சல்பைடு தாதுவை அதன் ஆக்சைடாக மாற்ற உகந்த முறை காற்றுள்ள சூழலில் வறுத்தல்.
- இரும்பின் மூன்று வகைகள் : வார்பிரும்பு ( 2% – 4.5% அளவு கார்பன்), தேனிரும்பு ( <0.25% அளவு கார்பன்), எஃகு ( 0.25% – 2% அளவு கார்பன்)
- இரசக்கலவை என்பது மெர்குரி, சில்வர், டின் போன்ற உலோகங்களின் கலவையாகும். பற்குழிகளை அடைக்கப்பயன்படுகிறது.
- காப்பரின் உலோகக்கலவைகள் : பித்தளை (Cu,Zn), வெண்கலம் (Cu,Sn,Zn), துப்பாக்கி வெண்கலம் (Cu,Zn,Sn,Pb), ஜெர்மன் வெள்ளி (Cu,Zn,Ni)
- அலுமினியத்தின் உலோகக்கலவைகள் : டியுரலுமின்(Al,Mg,Mn,Cu), மெக்னாலியம் (Al,Mg)
- இரும்பின் உலோகக் கலவைகள் : துருப்பிடிக்காத எஃகு (Fe,C,Ni,Cr), நிக்கல் எஃகு (Fe,C,Ni), டங்ஸ்டன் எஃகு (Fe,W,C)
- உலோகக்கலவையாக்கலுக்கு எடுத்துக்காட்டு துருப்பிடிக்காத எஃகு
- இரும்பின் மீது துத்தநாகம் மின்முலாம் பூசுவதற்கு நாகமுலாம் பூசுதல் என்று பெயர்.
- ஒரு உலோகத்தை மற்றொரு உலோகத்தின் மேல் மின்சாரத்தின் மூம் பூசுவதற்கு மின்முலாம் பூசுதல் என்று பெயர்.

**மதிப்பீடு**

**பகுதி அ**

1. நவீன தனிம வரிசை அட்டவணையில் தொடர்களும், தொகுதிகளும் உள்ளன. வரிசைகளும், தொகுதிகளும் முறையே அ) கிடைமட்ட தொடர்கள், செங்குத்து வரிசைகள் (தொகுதிகள்). ஆ) செங்குத்துப் வரிசைகள் (தொகுதிகள்) கிடைமட்ட தொடர்கள்.
2. மூன்றாவது வரிசையில் 8 தனிமங்கள் உள்ளன. அவற்றில் எத்தனை அலோகங்கள் உள்ளன ?
3. அனைத்துக் கரிமச் சேர்மங்களுக்கும் அடிப்படையான தனிமம் ________ தொகுதியில் உள்ளது. **(14வது தொகுதியில்** / 15வது தொகுதியில்)
4. தாதுவிலிருந்து உலோகமானது லாபகரமானதாக பிரித்தெடுக்கப்படுகிறது. அலுமினியமானது பாக்ஸைட்டிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. இது ________என அழைக்கப்படுகிறது. **(தாது** / கனிமம்).
5. தங்கம் என்ற தனிமமானது சேர்மமாக கிடைப்பது இல்லை. இது காற்று அல்லது நீருடன் வினைபுரிவது இல்லை. இது ________ நிலையில் உள்ளது. **(தனித்தநிலை** / சேர்ந்த நிலை)
6. உறுதிப்படுத்துதல்: காப்பர் பாத்திரங்களை தூய்மைப்படுத்தப்படவில்லை எனில் பச்சை நிற படிமம் தோன்றுகிறது. காரணம்: இந்தப் படிமத்திற்கான காரணம் கார தாமிர கார்பனேட். அ) உறுதிப்படுத்துதல் காரணம் இரண்டும் சரி. ஆ) உறுதிப்படுத்துதல் சரி காரணம் சரியல்ல.
7. சல்ஃபைடு தாதுவை அடர்ப்பிக்கப் பயன்படும் முறை ________ ( **நுரை மிதப்பு முறை** / புவியீர்ப்பு முறை)
8. இரும்பு உலோகப் பரப்பின் மீது வேறு உலோகத்தைப் பூசுவதால் துருப்பிடித்தலில் இருந்து தடுக்கலாம். இந்த இரும்பின் மீது துத்தநாகத் துகளை மெல்லியதாக பூசினால் அதற்கு ________ என்று பெயர். ( **துத்தநாக முலாம் பூசுதல்** / வண்ணப்பூச்சு அடித்தல் / எதிர்முனை பாதுகாத்தல் )
9. எந்த உலோகம் பாதரசத்துடன் சேர்ந்தாலும் அதற்கு இரசக்கலவை என்று பெயர். பற்குழிகளை அடைப்பதற்கு பயன்படும் இரசக்கலவை ________ ( **Ag-Snஇரசக்கலவை** / Cu-Snஇரசக்கலவை )

**கார்பனும் அதன் சேர்மங்களும்**

- ஜெர்மனியைச் சேர்ந்த வேதியியல் அறிஞர் ஹோலர் என்பவர் அமோனியம் சயனேட்டு என்ற கனிம சேர்மத்திலிருந்து, யூரியா என்ற கரிம சேர்மத்தை முதன்முதலில் சோதனைச் சாலையில் தயாரித்தார்.
- மிகவிலை உயர்ந்த வைரமானது படிக புறவேற்றுமை வடிவம் கொண்ட கார்பன் ஆகும். கோகினூர் வைரமானது 105 கேரட் வைரம் ஆகும் (21.68 கிராம்).
- வைரத்தில் உள்ள ஒவ்வொரு கார்பன் அணுவும் மற்ற நான்கு கார்பன் அணுக்களுடன் பிணைப்புற்று, கடின முப்பரிமான அமைப்பை உருவாக்குகின்றது.
- கிராபைட் அலோகமாகும். ஆனால் தன் பிணைப்புறா எலக்ட்ரான்கள் மூலம் மின்சாரத்தைக் கடத்தும் தன்மையது.
- கார்பனின் மற்றொரு புறவேற்றுமை வடிவம் ஃபுல்லிரீன் ஆகும். இது கால்பந்து வடிவில் 60 கார்பன் அணுக்களைக் கொண்டதாகக் காணப்படும் (C – 60).
- C2 H6 O என்ற மூலக்கூறு வாடீநுப்பாடில் எத்தனாலும் (C2 H5 OH) டைமெத்தில் ஈதரும் (CH3-O-CH3) கார்பன் சேர்மங்களில் மாற்றிய அமைப்புகளாகும்.
- ஒத்த வேதிப்பண்புகள் கொண்ட கரிமச்சேர்மங்கள் CH2 என்ற தொகுதியால் வேறுபடும்.
- அல்கேன் = CnH2n+2
- அல்கீன் = CnH2n
- அல்கைன் = CnH2n-2

| அல்கீன் | பொதுப் பெயர் | IUPAC பெயர் |
|---|---|---|
| CH2 = CH2 | எத்திலீன் | ஈத்தீன் |
| CH3CH = CH2 | புரொப்பிலின் | புரோப்பீன் |
| CH3CH2 CH = CH2 | ய- பியூட்டிலீன் | பியூட் – 1 – யீன் |
| CH3CH = CHCH3 | ெ– பியூட்டிலீன் | பியூட் – 2 – யீன் |

NATRAJ INSTITUTE OF TNPSC

| அல்கைய்ன் | பொதுப் பெயர் | IUPAC பெயர் |
|---|---|---|
| $HC \equiv CH$ | அசிட்டிலீன் | ஈத்தைன் |
| $H_3C - C \equiv CH$ | மெத்தில் அசிட்டிலீன் | புரொப்பைன் |
| $H_3C - C \equiv C - CH_3$ | டை மெத்தில் அசிட்டிலீன் | 2 –பியூட்டைன் |
| $H_3C - CH_2 - C \equiv CH$ | எத்தில் அசிட்டிலீன் | 1 – பியூட்டைன் |

- வினை செயல் தொகுதிக்கு எடுத்துக்காட்டு :ஆல்கஹால் ⇒–OH கீட்டோன் ⇒C=O ஆல்டிஹைடு⇒– CHO கார்பாக்ஸிலிக் அமிலம்⇒– COOH
- ஆல்டிஹைடுகள் மூலக்கூறு வாய்ப்பாடு

| மூலக்கூறு வாய்ப்பாடு | பொதுப்பெயர் | IUPAC பெயர் |
|---|---|---|
| HCHO | பார்மால்டிஹைடு | மெத்தனேல் |
| $CH_3CHO$ | அசிட்டால்டிஹைடு | எத்தனேல் |
| $CH_3CH_2CHO$ | புரோப்பியனால்டிஹைடு | புரோப்பனேல் |
| $CH_3CH_2CH_2CHO$ | n-பியூட்டிரால்டிஹைடு | பியூட்டனேல் |

- HCOOH - பார்மிக் அமிலம்
- $CH_3COOH$ - அசிட்டிக் அமிலம்
- எத்தனால் அல்லது எத்தில் ஆல்கஹால் அல்லது ஆல்கஹால் என்பது ஆல்கஹால்களின் குடும்பத்திலேயே மிக முக்கியமான சேர்மங்களில் ஒன்றாகும்.
- ஈஸ்ட்டிலுள்ள இன்வர்டேஸ் மற்றும் சைமேஸ் ஆகிய நொதிகள் சர்க்கரையை எத்தனாலாக மாற்றுகின்றன.
- எத்தனாலின் நீர்க்கரைசல் 95.5% எத்தனாலையும் 4.5% நீரையும் பெற்றுள்ளது. இது எரி சாராயம் என அழைக்கப்படுகிறது.
- எத்தனால் எத்தனாயிக் அமிலத்துடன் அடர்$H_2SO4$ (வினையூக்கி) முன்னிலையில் எத்தில் எத்தனோயேட்டையும் நீரையும் தருகிறது. ஆல்கஹால் மற்றும் கார்பாக்ஸிலிக் அமிலம் இவற்றின் வினையால் உருவான சேர்மம் எஸ்டர் (பழச்சாறின் மணம் கொண்டது) எனப்படுகிறது. இந்த வினையை எஸ்ட்ராக்குதல் என அழைக்கிறோம்.
- மெத்தனால் கல்லீரலில் மெத்தனேலாக (பார்மால்டிஹைடு) ஆக்ஸிஜனேற்றம் அடைந்து செல்களிலுள்ள பகுதிகளுடன் வேகமாக வினை புரிகிறது.
- மெத்தனேல் செல்லிலுள்ள புரோட்டாபிளாசத்தை சூடுபடுத்தும்போது முட்டை கெட்டிப்படுவதைப் போல் கெட்டியாக மாறுகிறது. மேலும் மெத்தனால் கண் நரம்புகளை பாதித்து குருட்டுத்தன்மையை உருவாக்குகிறது.
- அசிட்டிக் அமிலம் பொதுவாகப் பல வகைப் பழங்களிலும் காணப்படுகிறது. இவற்றில் புளிப்புச் சுவை இந்த அமிலத்தினாலேயே ஆகும்.
- எத்தனாயிக் அமிலம் காடியைத் (வினீகர்) தயாரிக்கப் பயன்படுகிறது.

**பொருள்களைப் பிரித்தல்**

- உணவு பொருள்கள் கலப்படம் இல்லாதவை என்பதை உறுதி செய்து கொள்ள அக்மார்க் முத்திரை பயன்படுகிறது.
- கையால் தெரிந்தெடுத்தல், தூற்றுதல், சளித்தல் மற்றும் காந்த பிரிப்பு முறைகள் போன்றவை திண்மக் கலவைகளை பிரிக்கும் முறைகளாகும்.
- காய்கறியினைப் பிரித்தெடுத்தல் கையால் தெரிந்தெடுத்தலுக்கு உதாரணம்.
- கலவையில் உள்ள பொருள்கள் லேசானதாக இருந்தால் அவற்றை தூற்றுதல் முறையில் பிரிக்கலாம். விவசாயிகள், பதறுடன் கூடிய தானியத்தை தூற்றுதல் முறையில் பிரித்தெடுப்பர்.
- ஒரே கலவையின் உள்ள பகுதிப் பொருள்களின் பருமன் அளவு வேறுபட்டால் அவற்றை சளித்தல் முறையில் பிரிக்க முடியும்.
- மாவிலிருந்து அரைபடாதப் பொருள்கள் குருணை, தவிடு, புழு, வண்டு ஆகியவற்றை சளித்தல் முறையில் பிரித்தெடுக்கலாம். மணலிலிருந்து கற்களை நீக்கவும் சளித்தல் முறை பயன்படுகிறது.
- காந்தத்தால் கவரப்படும் ஒரு பொருள் கலவையின் பகுதியாக இருந்தால், அதனை பிரித்தெடுக்கும் முறை காந்தப் பிரிப்பு முறை எனப்படும்.
- பளு தூக்கிகளில் மின்காந்தங்களையே பயன்படுத்துகிறோம்.
- நீரில் கரையாத திண்மங்களையும், ஒன்றை விட மன்றொன்று கனமான பகுதிப் பொருள்களை கொண்ட கலவைகளையும் தெளிய வைத்தல், தெளியவைத்து இறுத்தல், வடிகட்டுதல் முறைகளால் பிரிக்கலாம்.
- திணமப்பொருளும், திரவப்பொருளும் கலந்த கலவையை அசையாமல் வைத்து, திரவத்தின் அடியில் திண்மப்பொருளை படியச் செய்தல் தெளியவைத்தல் ஆகும்.
- தெளியவைத்த கலவை ஒன்றிலிருந்து, தெளிவான திரவப்பொருளை மட்டும் மற்றொரு கலனுக்கு கண்ணாடியின் குச்சியின் உதவியுடன் மாற்றுதல் தெளியவைத்து இறுத்தல் எனப்படும்.
- வடிகட்டுதல் முறையில் வடிதாள் வழியே முகவையில் சேகரிக்கப்படும் நீர் வடிநீர் எனப்படும். வடிதாளிலேயே தங்கும் மணல் கசடு எனப்படும்.
- ஒரு நீர்மத்தை வெப்பத்தால் ஆவியாக மாற்றும் முறை ஆவியாதல் எனப்படும்.
- ஒரு லிட்டர் கடல் நீரில் சுமார் 3.5கிராம் உப்புக் கரைந்துள்ளது.
- கடல் நீரில் நாம் உண்ணும் உப்பு மட்டும் இல்லாமல் 50–க்கும் மேற்பட்ட கனிமங்கள் உள்ளன.
- நீர் சுழற்சியில் ஆவியாதல் மற்றும் ஆவிசுருங்கி நீர்மமாதல் ஆகியவை மழை வருவதற்கு காரணமாக அமைகின்றன.
- கரும்பிலிருந்து சர்க்கரையை தயாரிக்கும்போது வடிகட்டுதல், ஆவியாதல், படிகமாக்கல் போன்ற பல பிரித்தல் முறைகள் பயன்படுகின்றன.
- கலவையில் உள்ள லேசான மாசுக்களை நீக்க ஏற்ற முறை தூற்றுதல்.
- கலவையில் உள்ள பொருள்களின் அளவை அடிப்படையாகக் கொண்ட பிரித்தல் முறை சளித்தல்.
- பழச்சாறு தயாரிப்பில், சாற்றிலிருந்து விதைகளைப் பிரிக்க ஏற்ற முறை வடிகட்டுதல்.
- உப்பை கடல்நீரில் இருந்து பிரிக்கும் முறை ஆவியாதல்.
- நிறம், அளவு, வடிவத்தில் வேறுபட்ட திண்மக் கலவைகளைப் பிரிக்கும் முறை கையால் தெரிந்தெடுத்தல்.
- பெட்ரோல், மண்ணெண்ணெயிலிருந்து அந்துருண்டை (நாப்தலின்) வரை ஏறக்குறைய 86 வகையான பொருள்கள் கச்சா எண்ணெய் எனும் கலவையிலிருந்தே பிரித்தெடுக்கப்படுகின்றன.
- காற்று பல வாயுக்கள் சேர்ந்தக் கலவையாகும்.

NATRAJ INSTITUTE OF TNPSC